ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 1-45

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, விதிகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். பேரவைக் குழுக்களின் பணிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானங்கள். முன்மொழிதல், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற

1. மதிப்பீட்டுக் குழு
2. பொதுக் கண்க்குக் குழு
3. பொது நிறுவனங்கள் குழு
4. விதிகள் குழு
5. அலுவல் ஆய்வுக் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3), 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக் குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்றவேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)-னைத் தளர்த்தி, அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப் பெறும்வரை பணியாற்றவேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இன்னொரு தனித் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற

1. அவை உரிமைக் குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக் குழு